செ.வெ.எண்:67/மார்ச்/2019 நாள்:27.03.2019

**திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் பாராளுமன்ற பொது தேர்தல் 2019, பொது பார்வையாளராக திரு.அமித் குமார், இ.ஆ.ப., அவர்கள் திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற்கு வருகை - 24.திருச்சிராப்பள்ளி பாராளுமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சு.சிவராசு, இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

---- --- ----

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுரையின்படி நடைபெற உள்ள பாராளுமன்ற பொது தேர்தல், 2019-க்கு 24.திருச்சிராப்பள்ளி பாராளுமன்ற தொகுதிக்கு பொது பார்வையாளராக திரு.அமித் குமார், இ.ஆ.ப., அவர்கள் இன்று 27.03.2019 காலை திருச்சிராப்பள்ளிக்கு வருகை புரிந்து பணிபுரிந்து வருகிறார். பொது பார்வையாளர் வருகையினையொட்டி இன்று 27.03.2019 காலை 11.00 மணியளவில் திருச்சிராப்பள்ளி பாராளுமன்ற தொகுதியில் போட்டியிட 26.03.2019 மாலை 3.00 மணி வரை பெறப்பட்ட வேட்பு மனுக்கள் பரிசீலனை தேர்தல் பொதுப்பார்வையாளர் முன்னிலையில் 24.திருச்சிராப்பள்ளி பாராளுமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

மேலும், பொதுமக்கள், அரசியல் கட்சி பிரமுகர்கள் மற்றும் பத்திரிக்கையாளர்கள் ஆகியோர் 24.திருச்சிராப்பள்ளி பாராளுமன்ற தொகுதிக்கான (139-ஸ்ரீரங்கம், 140-திருச்சிராப்பள்ளி மேற்கு, 141-திருச்சிராப்பள்ளி கிழக்கு, 142-திருவெறும்பூர், 178-கந்தர்வகோட்டை(தனி), 180-புதுக்கோட்டை ஆகிய சட்டமன்ற தொகுதிகள்) தேர்தல் தொடர்பான புகார்களை திருச்சிராப்பள்ளி, சுப்பிரமணியபுரம், TVS டோல்கேட் அருகே அமைந்துள்ள பொதுப்பணித்துறை சுற்றுலா மாளிகையின் "B" பிளாக்கில் உள்ள பொது பார்வையாளர் அவர்களின் அலுவலகத்தில் காலை 09.30 மணி முதல் 10.30 மணி வரை நேரடியாக தெரிவிக்கலாம் என்றும், மேலும் புகார்களை கீழ்க்கண்ட தொலைபேசி எண்ணிலும் தெரிவிக்கலாம் என 24.திருச்சிராப்பள்ளி பாராளுமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

**பொதுப்பார்வையாளர் அலுவலக தொலைபேசி எண் :0431-2318677**
**பொதுப்பார்வையாளர் அவர்களின் கைபேசி எண் : 93852-28902.**
**பொதுப்பார்வையாளர் அலுவலக நிகரி எண் : 0431-2318677.**

செய்தி வெளியீடு:

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
திருச்சிராப்பள்ளி.